10.3.2021
அசல் வழக்கு எண்:253-2016

வா.சா.3 பாண்டி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

வாதி அழைத்ததன் பேரில் நீதிமன்றத்திற்கு நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்தில் வாழை பயிரிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது விவசாயத்திற்கு தண்ணீர் வசதி இல்லாததால் வாதியின் நிலத்திலிருந்து தண்ணீர் பெற்று விவசாயம் செய்து வருகிறேன் என்றால் வாடகைக்கு தண்ணீர் பெற்று விவசாயம் செய்து வருகிறேன். ஆவணங்கள் பதிவு செய்வது பற்றிய விபரங்களும், சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவு செய்வது சம்மந்தமான நடைமுறைகளும் எனக்கு தெரியும். ஆவணத்தை எழுதி கொடுப்பவரும், எழுதி வாங்குவரும் கையெழுத்திட்ட பின்னர்தான் சாட்சிகள் கையெழுத்திடுவார்கள் என்றால் சரிதான். ஆவணம் எழுதப்பட்டுள்ளதில் ஏதேனும் ஒரு நபர் கையெழுத்திடாமல் இருந்தால் அந்த ஆவணம் செல்லாது என்றால் சரிதான். எழுதி வாங்குபவர் மற்றும் எழுதி கொடுப்பவர் ஆவணத்தில் கையெழுத்து செய்யாமல் சாட்சி கையெழுத்து செய்திருந்தால் அந்த ஆவணம் மோசடியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7.5.2009ம் தேதியிட்ட சமாதான ஒப்பந்த பத்திரம் நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 7.5.2009ம் தேதியிட்ட ஆவணம் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படாததால் அதனை பொறுத்து நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. 7.5.2009ம் தேதியிட்ட ஆவணம் சட்டபடி செல்லாத ஆவணம் என்பதால் நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7.5.2009ம் தேதியிட்ட ஆவணம் நானும், வாதியும் சேர்ந்து தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.